**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.NO. 121/2021 |
| Prosecution Witness | : | **அ.சா.** 3 |
| Name | : | மேனகா |
| Father's Name | : | **அசோகன்** |
| Address | : | மேலபுலியூர், பெரம்பலூர். |
| Age | : | 39/2025 |

**தேதி : 11.02.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா. 1 எனது தம்பி ஆவார். அ.சா. 2 எனது அம்மா. தேதி, மாதம் ஞாபகமில்லை, சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இடப்பிரச்சனை சம்மந்தமாக இவ்வழக்கின் எதிரிகளிடம் கேட்டபோது எதிரி ராதாகிருஷ்னன் குச்சியால் என்னை அடித்தார். நான் தடுத்ததில் வலது பக்க மோதிர விரலில் காயம் ஏற்பட்டது. மேலும் எனது வலது நெற்றி மற்றும் மூக்கு பகுதிகளில் காயம் ஏற்பட்டது. எதிரி ராஜா எனது அம்மாவின் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். எனது தம்பியை எனது சித்தப்பா ராதாகிருஷ்ணன் குச்சியாலும், கையாலும் அடித்ததினால் அவரது கை மற்றும் கால்களில் இரத்தக்காயம் ஏற்பட்டது. பின்னர் காயம்பட்ட நாங்கள் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தோம். வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய பணித்தபோது குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்கள். அதனால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.